ஜெருசலேம் புனிதப் பயணம்: மானியம் பெற கிறிஸ்தவர்கள் விண்ணப்பிக்கலாம்

சேலம், அக். 9: ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொண்டு திரும்பும் கிறிஸ்தவர்களுக்கு நேரடியாக மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் க. இளம்பகவத் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கிய 600 கிறிஸ்தவர்கள் பயன்பெறும் வகையில், ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொண்டு திரும்பிய 550 கிறிஸ்தவர்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ.37,000 வீதமும், 50 கன்னியாஸ்திரிகள் மற்றும் அருட்சகோதரிகளுக்கு நபர் ஒருவருக்கு ரூ.60,000 வீதமும் மானியம் வழங்கப்படுகிறது.

மின்னணு பணப் பரிமாற்ற முறையில் (இசிஎஸ்) நேரடியாக மானியம் வழங்கும் இத்திட்டத்தின்கீழ், நடப்பு ஆண்டில் ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொண்டு திரும்பிய கிறிஸ்தவப் பயணாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் கட்டணமின்றிப் பெற்றுக்கொள்ளலாம். www.bcmbcmw.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாகவும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

நிறைவுசெய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய ஆவணங்களுடன் ஜனவரி 31-ஆம் தேதிக்குள், ஆணையர், சிறுபான்மையினர் நலத்துறை, கலசமஹால் பாரம்பரியக் கட்டடம், முதல் தளம், சேப்பாக்கம், சென்னை என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கன்வாடி மையத்துக்கு புதிய கட்டடம் கட்ட கோரிக்கை

சங்ககிரி, அக். 9: சங்ககிரி ஊராட்சி ஒன்றியத்திற்கு உள்பட்ட கோனேரிப்பட்டி அக்ரஹாரம் ஊராட்சி, கல்வடங்கத்தில் உள்ள பழைமையான அங்கன்வாடி மையத்தை அகற்றிவிட்டு புதிய கட்டடம் கட்ட வேண்டும் என அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கோனேரிப்பட்டி அக்ரஹாரம் ஊராட்சிக்கு உள்பட்ட கல்வடங்கத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் துறையின் சார்பில் அங்கன்வாடி மையம் செயல்பட்டு வருகிறது. பழைமை வாய்ந்த அங்கன்வாடி மைய கட்டடத்தின் கான்கிரீட் மேற்கூரை பெயர்ந்துள்ளது.

மழைக் காலங்களில் வெள்ளம் மையத்துக்குள் புகுவதால் குழந்தைகளும், அங்கன்வாடி ஊழியர்களும் அவதிப்பட்டு வருகின்றனர். இதனால் பழைமை வாய்ந்த அங்கன்வாடி மைய கட்டடத்தை அகற்றிவிட்டு அங்கு புதிய கட்டடம் கட்ட வேண்டும் என ஆட்சியர், முதல்வரின் தனிப்பிரிவுக்கு பொதுமக்கள் கோரிக்கை மனு அனுப்பியுள்ளனர்.

இந்தியன் வங்கி / Indian Bank / ALLAHABAD

மண்டல அலுவலகம், 3வது தளம், திவ்யா டவர்ஸ், 15/1, கோட்டை மெயின் ரோடு, அரசு சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை எதிரில், சேலம். Ph : 0427-2218168.

அலுவலக வளாகத்தை குத்தகைக்கு எடுப்பதற்கான
டெண்டர் அறிவிப்பு

பொதுத்துறை வங்கியான **இந்தியன் வங்கி, இளம்பிள்ளை எல்லைக்குள் 1400 ச.அடி முதல் 1700 ச.அடி** பரப்பளவில் குத்தகை அடிப்படையில் (கட்டடத்துடன் கூடிய இடம் / பகுதியளவு கட்டப்பட்ட கட்டடத்துடன் கூடிய இடம்) அலுவலக வளாகத்தின் உரிமையாளர்களிடமிருந்து 2 ஏல முறைகளில் (தொழில்நுட்ப மற்றும் நிதி ஏலம்) டெண்டர்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. எங்கள் **இளம்பிள்ளை கிளை** அமைப்பதற்கு குறைந்தபட்சம் 10 to 15 வருட குத்தகை காலத்திற்கு பார்க்கிங் வசதியுடன் (தரைத்தளத்தில் மட்டும்) இடம் தேவை.

டெண்டர் படிவங்களை **www.indianbank.in** என்ற இணையதளத்தில் இருந்து **10-10-2026 முதல் 31-10-2026 வரை** பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஏலம் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி **31-10-2026 மதியம் 3.00 மணிவரை.**

எந்தவொரு காரணத்தையும் கூறாமல் ஏதேனும் அல்லது அனைத்து விண்ணப்பங்களையும் நிராகரிக்க வங்கிக்கு உரிமை உண்டு.

துணை பொது மேலாளர்
இந்தியன் வங்கி, மண்டல அலுவலகம்
வளாகத்துறை

கடன் வசூல் தீர்ப்பாயம்
ஜவான்ஸ் பவன், 2-வது, 3-வது தளம், எண்.27,
டிராவலர்ஸ் பங்களா சாலை, கோயம்புத்தூர்-641018

O.A No. 302 of 2025

கனரா வங்கி,
சேலம் குகை கிளை,
நெ.576, பத்ரி நகர், திருச்சி மெயின் ரோடு,
குகை, சேலம் – 636006 ... மனுதாரர்

மற்றும்

1. **M/s. லட்சுமி நாராயணா டெக்ஸ்,** பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட அதன் உரிமையாளர் திருமதி. G.V.லதா, 118/2, தெற்கு பிள்ளையார் கோவில் தெரு, கருங்கல்பட்டி, குகை, சேலம் - 636006.
2. **திருமதி. G.V.லதா (உரிமையாளர்),** க/பெ. திரு. V.வெங்கடேசன், 118/2, தெற்கு பிள்ளையார் கோவில் தெரு, கருங்கல்பட்டி, குகை, சேலம் - 636006.
3. **திரு. V.வரதராஜு (ஜாமீன்தாரர் & அடமானதாரர்),** நெ.92A, கருங்கல்பட்டி மெயின் ரோடு நெ.2, குகை, சேலம் - 636006.
4. **திரு. V.வெங்கடேசன் (ஜாமீன்தாரர்),** த/பெ. V.வரதராஜு, 118/2, தெற்கு பிள்ளையார் கோவில் தெரு, கருங்கல்பட்டி, குகை, சேலம் - 636006.

... பிரதிவாதி

பிரதிவாதிகளுக்கான அறிவிப்பு

இதனால் சகலமானவர்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால் மேற்படி மனுதாரர் வங்கி பிரதிவாதிகள் மீது **Rs.25,47,424.18** பின் வட்டி மற்றும் செலவு தொகையோடு வரப்பற்றுவதற்காக தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளது. மேற்படி பிரதிவாதிகள் ஆஜராவதற்கு வரும் **12.10.2026**-ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பாயத்தில் **12.10.2026**-ம் தேதியன்று காலை 11.00 மணிக்கு பிரதிவாதிகள் 1, 2, 3 மற்றும் 4 நேரடியாகவோ அல்லது வழக்குரைஞர்கள் மூலமாகவோ கற்றறிந்த பதிவாளர், கடன் வசூல் தீர்ப்பாயம், கோயம்புத்தூர்-ல் ஆஜராகி ஆட்சேபனை இருப்பின் தெரிவிக்க வேண்டியது. ஆஜராக தவறும் பட்சத்தில் ஒரு தலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

SHANKAR M.V BAL., LLB., (M/S.962/2010)
Advocate, 405-406, Behind Jk Steels,
Bharathiyar Road, New Siddhapudur,
Coimbatore - 641044. Cell: 9943497000/ 9943347000

சேலத்தில் கோயிலுக்கு தானமாக வழங்கிய மாடுகளை சட்டவிரோதமாக விற்பனை செய்த விவகாரம்

அறநிலையத் துறைக்கு உத்தரவு

சென்னை, அக். 9: சேலம் மேச்சேரியில் உள்ள பத்ரகாளி அம்மன் கோயிலுக்கு பக்தர்கள்தானமாக வழங்கிய 200 எருமை மாடுகள் சட்டவிரோதமாக விற்பனை செய்யப்பட்டதுகுறித்து விசாரணை நடத்த இந்து சமய அறநிலையத் துறைக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

சேலம் மாவட்டம் மேச்சேரியில் பத்ரகாளி அம்மன் கோயில் உள்ளது. இந்த கோயிலுக்குபக்தர்கள் எருமை மாடுகளை தானமாக வழங்குகின்றனர். அவ்வாறு வழங்கப்பட்ட 200 எருமை மாடுகளை, துரைராஜ் என்பவர் ரூ.83 லட்சத்துக்கு சட்டவிரோதமாக விற்பனை செய்தார். இதுகுறித்து விசாரித்த இந்துசமய அறநிலையத்துறை, துரைராஜின் வங்கிக் கணக்கை முடக்கி ரூ.83 லட்சத்தை வசூலிக்க நடவடிக்கை எடுத்தது.

இந்து சமய அறநிலையத்துறையின் இந்த நடவடிக்கைக்கு எதிராக துரைராஜ் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கு நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி முன் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில், தனது தரப்பு விளக்கம் அளிக்க அவகாசம் வழங்காமல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வாதிடப்பட்டது.

இதையடுத்து, இந்த வழக்கு தொடர்பான ஆவணங்களை ஆய்வு செய்த நீதிபதி, மனுதாரர் விளக்கம் அளிக்க அவகாசம் வழங்கவில்லை எனக்கூறி, வங்கிக் கணக்கு முடக்கம் மற்றும் வசூல் நடவடிக்கையை ரத்து செய்து உத்தரவிட்டார். மேலும், மனுதாரருக்கு மீண்டும் நோட்டீஸ் அனுப்பி, அவருடைய விளக்கத்தைக் கேட்டு நடவடிக்கை எடுக்க இந்துசமய அறநிலையத்துறைக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

மேலும், ஓரிரு எருமை மாடுகளை விற்பனை செய்திருந்தால், தெரியாமல் போயிருக்கலாம். ஆனால், இருநூறு மாடுகள் விற்பனை செய்திருப்பதால், கோயிலின் செயல் அலுவலர் அஜாக்கிரதையாக செயல்பட்டிருக்கலாம் என சந்தேகம் எழுகிறது. எனவே, இதுகுறித்து விசாரணை நடத்தி அறநிலையத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

சேலத்தில் கண் பாதுகாப்பு விழிப்புணர்வு நடைப்பயணம்

விநாயகா மிஷனின் விம்ஸ் வளாக அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரி சார்பில் நடைபெற்ற பார்வை தின விழிப்புணர்வு நடைப்பயணத்தை தொடங்கிவைத்த சேலம் மாவட்ட வருவாய் அலுவலர் ரவிகுமார்.

ஆட்டையாம்பட்டி, அக். 9: உலக பார்வை தினத்தை முன்னிட்டு, கண் பாதுகாப்பு குறித்து விநாயகா மிஷனின் விம்ஸ் வளாக அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியின் கண் ஒளியியல் பிரிவு சார்பில் சேலத்தில் வியாழக்கிழமை (அக். 8) விழிப்புணர்வு நடைப் பயணம் நடைபெற்றது.

கல்லூரியின் முதன்மையர் செந்தில்குமார் முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்ற சேலம் மாவட்ட வருவாய் அலுவலர் நடைப்பயணத்தைத் தொடக்கி வைத்தார். சிறப்பு அழைப்பாளராக, சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் செண்பகவல் பங்கேற்றார்.

கண் ஆரோக்கியம் தொடர்பான விழிப்புணர்வுப் பதாகைகளை ஏந்தியபடி மாணவர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். சேலம் காந்தி மைதானத்தில் தொடங்கிய இந்த நடைபயணம், தமிழ்ச் சங்கம் சாலை வழியாகச் சென்று மீண்டும் காந்தி மைதானத்தில் நிறைவடைந்தது.

மேலும், பொதுமக்களிடையே விழிப்புணர்வை அதிகரிக்கும் வகையில், மாணவ, மாணவிகளின் மௌன நாடகம் மற்றும் விழிப்புணர்வு நடன நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இதற்கான ஏற்பாடுகளை, கல்லூரியின் கண் ஒளியியல் பிரிவுப் பொறுப்பாளர் பேராசிரியை தமிழ்சுடர் மற்றும் உதவிப் பேராசிரியர்கள் சூர்யா, அஞ்சலி, மைதிலி, சிவசங்கரி, இலக்கியா ஆகியோர் செய்திருந்தனர்.

சேலம் மார்க்கெட் ரயில் நிலையத்தில் ரயிலில் சிக்கி தொழிலாளி உயிரிழப்பு

சேலம், அக். 9: சேலம் மார்க்கெட் ரயில் நிலையப் பகுதியில் விரைவு ரயிலில் சிக்கி பள்ளப்பட்டியைச் சேர்ந்த பழனி (42) வியாழக்கிழமை இரவு உயிரிழந்தார்.

சேலம் - சென்னை எழும்பூர் இடையே நாள்தோறும் விரைவு ரயில் இயக்கப்பட்டு வருகிறது. இந்த ரயில் வியாழக்கிழமை இரவு 9.30 மணியளவில் சேலம் சந்திப்பு ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டு, சேலம் டவுன் நோக்கிச் சென்றது.

இரவு 9.40 மணியளவில் சத்திரம் மார்க்கெட் ரயில் நிலையத்தைக் கடந்தபோது, யார்டு பகுதியில் தண்டவாளத்தின் குறுக்கே வந்த பழனி மீது ரயில் மோதியதில் அவர் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தார்.

தகவலறிந்த சேலம் ரயில்வே சிறப்புக் காவல் உதவி ஆய்வாளர் முருகன் தலைமையிலான போலீஸார் சம்பவ இடத்துக்குச் சென்று, பழனியின் உடலைக் கைப்பற்றி சேலம் அரசு மருத்துவமனைப் பிரேத பரிசோதனைக் கூடத்துக்கு அனுப்பிவைத்தனர். இதுகுறித்து போலீஸார் வழக்குப் பதிவு செய்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

யூனியன் பேங்க் ஆப் இந்தியா / Union Bank of India / A Government of India Undertaking

பிராந்திய அலுவலகம் : 1 & 2வது தளம், AKP ரத்னா டவர்
எண்.13, பாரதியார் வீதி, சுப்ரமணிய நகர், சூரமங்கலம்,
சேலம் – 636005. போன் : 0427–2334813/14.
மின்னஞ்சல் : crld.rosalem@unionbankofindia.bank.in

அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு பிற்சேர்க்கை -IV-A

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான 15 நாள் மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் மற்றும் பொதுமக்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், கடன் வழங்கிய வங்கியால் பிணையத்திற்குள்ளான/அடமானப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது, யூனியன் பேங்க் ஆப் இந்தியாவின் (பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்), அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்து கொள்ளப்பட்டது (கீழ் குறிப்பிட்டுள்ள விபரப்படி), கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் ஆகியோரிடமிருந்து கடன் வழங்கிய வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைகளுக்காக **'எங்குள்ளதோ உள்ளபடி' 'என்ன உள்ளதோ அப்படியே'** மற்றும் **'என்ன நிலையில் உள்ளதோ உள்ளபடி'** என்கிற நிலையில் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தேதி அன்று விற்பனை செய்யப்படுகிறது. சொத்திற்கான குறைந்தபட்ச விலை மற்றும் முன்வைப்புத் தொகை விபரம் கீழே பட்டியலில் தரப்பட்டுள்ள விபரப்படியாகும்.

கிளை : எர்ணாபுரம் கிளை (33762). கடன்தாரர், சார்-கடன்தாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர் : கடன்தாரர்கள் : 1. திரு. தர்மலிங்கம் P, த/பெ. பழனிசாமி, **2. திரு. கிரி D,** த/பெ. தர்மலிங்கம், எண்.2/57, சுப்புநாயக்கனூர், தளிகை அஞ்சல், நாமக்கல், தமிழ்நாடு – 637 212 (இவ்விலாசம் மேற்படி இருவருக்கும் பொது). நிலுவைத் தொகை : **ரூ.11,64,922.95** (ரூபாய் பதினோரு லட்சத்து அறுபத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து இருபத்து இரண்டு மற்றும் பைசா தொண்ணூற்று ஐந்து மட்டும்) **30.09.2026** தேதி வரை, மற்றும் வட்டி, செலவுகள் மற்றும் கட்டணங்களுடன்.

சொத்து விபரம் : நாமக்கல் பதிவு மாவட்டம், வேலகவுண்டம்பட்டி சார் பதிவு மாவட்டம், நாமக்கல் தாலுகா, தளிகை கிராமம், பழைய சர்வே எண்.116/2, இதிலுள்ள 3.60 ஏக்கர் (1.45.5 ஹெக்டேர்) தீர்வை ரூ.4.50 நிலம் முழுமையும், இதில் 3.00 ஏக்கரின் கிழபுற பகுதி புதிய சர்வே எண்.116/2B ன்படி 1.21.5 ஹெக்டேர் தீர்வை ரூ.3.75, இந்நிலம் வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டதில், அதிலடங்கியதும் அதன் பகுதியுமான நிலம், அங்கு கட்டப்பட்ட சிறப்புக்கட்டுமானங்களுடன், மனை எண். 34 க்குரிய 1500 சதுரடிக்கு **எல்லைகள் விபரம் :** மனை எண்.35 க்குக் கிழக்கு, மனை எண்.33 க்கு மேற்கு, மனை எண்.27 க்கு வடக்கு, 25 அடி அகல கிழமேல் வழித்தடத்துக்குத் தெற்கு. இவ்வெல்லைகளுக்கிடையில், நிலத்தின் அளவுகளாக, கிழமேல் இருபுறமும் 30 அடி, தென்வடல் இருபுறமும் 50 அடி, மொத்தம் 1500 சதுரடி (139.35 சதுர மீட்டர்). புதிய சர்வேயின்படி மேற்படி நிலம் சர்வே எண்.116/2B2 ல் 0.01.39 ஹெக்டேர் முழுப் பரப்பும், ஆவணத்தில் உள்ளபடியான அனைத்து வழித்தட உரிமைகளுடன் மற்றும் அனைத்து வசதிகளில் உரிமைகளுடன். திரு. பழனிசாமி மகன் திரு. P. தர்மலிங்கத்துக்குச் சொந்தமான இச்சொத்து, எந்த வில்லங்கமும் இல்லாதது.

குறைந்தபட்ச விலை : ரூ.14,34,000/– முன்வைப்புத் தொகை : ரூ.1,43,400/– குறைந்தபட்ச ஏல உயர்வு : ரூ.25,000/–

வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க (ஏதேனுமிருப்பின்) விபரம் : இல்லை. எவ்வாறாயிருப்பினும் ஏலதாரர்கள் தங்களது சொந்த விசாரணையை மேற்கொள்ளுமாறு கோரப்படுகிறார்கள்.

கணக்கு எண்.: 337621980050000, யூனியன் பேங்க் ஆப் இந்தியா, எர்ணாபுரம் கிளை, IFSC கோடு : UBIN0933767 கணக்குப் பெயர் : Inward RTGS.

சுவாதீன வகை : ஆக்கபூர்வ சுவாதீனம். விற்பனை அறிவிப்பு தேதி : 09.10.2026

முன்வைப்புத் தொகை (EMD) சமர்ப்பிக்க கடைசித் தேதி :
ஏல நேரம் முடிவடையும் முன்பாக
ஏலத் தேதி / நேரம் : 28.10.2026 (புதன்கிழமை); நண்பகல் 12.00 மணி முதல்
மாலை 5.00 வரை, 10 நிமிட தன்னிச்சையான அளவற்ற நீட்டிப்புடன்.

குறிப்பு : 10 சதவீத முன்வைப்புத் தொகையை https://baanknet.com இணையதளம் மூலமாக செலுத்த வேண்டும். மேலும், விற்பனை விலையின் மீதித் தொகையை விற்பனை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு எண் வழியாக செலுத்த வேண்டும்.

விற்பனையின் விரிவான நிபந்தனை விபரங்களுக்கு கீழே கண்டுள்ள சம்பந்தப்பட்ட கணக்கிற்கான வங்கியின் இணையதளத்தில் அல்லது இ-ஏலத்தின் முகவரியின் இணையதளத்தில் கண்டுள்ள லிங்க்-கில் தொடர்பு கொள்ளவும்.

சொத்து விபரங்கள் (மின்னணு ஏல விற்பனை அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட பரப்பு மற்றும் அளவுகள் போன்றவை) கிடைத்த தகவல்களின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி நன்கு அறிந்தவரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஏதேனும் பிழை, தவறான தகவல் மற்றும் விடுபடுதலுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பொறுப்பேற்க மாட்டார். அடையாள சுவாதீனப் பரப்பு மற்றும் அளவுகள் மாறுபடலாம்.

https://www.unionbankofindia.bank.in/auction-property/viewauction-property.aspx | https://baanknet.com

ஏலதாரர் பதிவு, லாகின் செய்ய மற்றும் ஏல விதிகளை தெரிந்து கொள்ள கீழ் குறிப்பிட்ட வலைதளத்துக்கு வருகை தரவும் https://baanknet.com மற்றும் "Buyer Guide for Login and Registration" –ஐ கிளிக் செய்யவும்.

(அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)
இடம் : சேலம் யூனியன் பேங்க் ஆப் இந்தியா

சேலம், கெங்கவல்லியில் தவெகவினர் கொண்டாட்டம்

கெங்கவல்லியில் பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி கொண்டாடிய தவெகவினர்.

சேலம்/ தம்மம்பட்டி, அக். 9: தாராபுரம், மதுராந்தகம் இடைத்தேர்தல்களில் தவெக வேட்பாளர்கள் வெற்றி பெற்றதையடுத்து, சேலத்தில் அக்கட்சியினர் வெள்ளிக்கிழமை இனிப்புகள் வழங்கியும், பட்டாசுகள் வெடித்தும் கொண்டாடினர்.

இடைத்தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து, சேலம் பழைய பேருந்து நிலையத்தில் பொதுமக்களுக்கு போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆ. விஜய் தமிழன் பார்த்திபன் இனிப்புகள் வழங்கினார். இதில், தவெக மத்திய மாவட்ட நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

தம்மம்பட்டி....

இடைத்தேர்தல் வெற்றியை வரவேற்று கெங்கவல்லியில் தவெகவினர் பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினர்.

கெங்கவல்லி தியேட்டர் பேருந்து நிறுத்தம், கடைவீதி, யூனியன் அலுவலகப் பேருந்து நிறுத்தம் ஆகிய இடங்களில் ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க முன்னாள் துணைத் தலைவர் எல். முருகன் தலைமையில் தவெகவினர் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினர்.

நிகழ்வில், கெங்கவல்லி தவெக கிழக்கு ஒன்றியச் செயலாளர் லட்சுமணன், மேற்கு ஒன்றியச் செயலாளர் செந்தில்குமார், நகரச் செயலாளர் பிரபு, மாவட்ட இளைஞரணி இணைச் செயலர் மோகன்தாஸ், நிர்வாகிகள் ஆம்ஸ்ட்ராங், பாஸ்கர், சக்திவேல், சிவா, கைலாசகண்ணி, கோவிந்தராஜ், மோகன், ரவி, ரகுமான், ஷெரீப் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

சேலத்தில் நாளை தீவிர சிகிச்சை மருத்துவக் கருத்தரங்கு

மருத்துவக் கருத்தரங்கு குறித்து செய்தியாளர்களிடம் பேசிய சேலம் ஸ்ரீ கோகுலம் மருத்துவமனை மேலாண் இயக்குநர் டாக்டர் அர்த்தநாரி.

சேலம், அக். 9: சேலம் ஸ்ரீ கோகுலம் மருத்துவமனை சார்பில் தீவிர சிகிச்சை குறித்த மருத்துவக் கருத்தரங்கு ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது.

இதுகுறித்து மருத்துவமனையின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. அர்த்தநாரி வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஸ்ரீ கோகுலம் மருத்துவமனையில் பல்வேறு மருத்துவத் துறைகளுக்கான ஏழு தீவிர சிகிச்சைப் பிரிவுகள் உள்ளன. மூளை தொடர்பான நோய்கள், இதயச் செயலிழப்பு, நுரையீரல் செயலிழப்பு, கல்லீரல் மற்றும் சிறுநீரகப் பாதிப்புகள், கடுமையான தொற்றுநோய்கள், பெரிய அளவிலான விபத்துக் காயங்கள், அறுவைச் சிகிச்சைக்குப் பிந்தைய சிக்கல்கள், நச்சுப் பாதிப்புகள், சர்க்கரை நோயால் ஏற்படும் உறுப்புச் செயலிழப்புகள் ஆகியவற்றுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

நவீன மருத்துவக் கருவிகளுடன் உள்ள இந்த மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் வழங்கப்படும் சிறப்பு சிகிச்சைகள் மூலம் உயிருக்கு ஆபத்தான நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் விரைவாக இயல்பு நிலைக்குத் திரும்ப முடியும்.

அதன் ஒருபகுதியாக, தீவிர சிகிச்சைகள் குறித்த கருத்தரங்கு ஞாயிற்றுக்கிழமை ரேடிசன் ஹோட்டலில் நடைபெறவுள்ளது. இதில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்கள் அவசர சிகிச்சை மற்றும் தீவிர சிகிச்சை தொடர்பான பல்வேறு தலைப்புகளில் உரையாற்ற உள்ளனர் என்றார்.

பேட்டியின்போது மருத்துவர்கள் செல்லம்மாள், பிரகாசம், ராஜேஷ், ஜெயதேவ் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

தேசிய டென்னிஸ் போட்டி: மாண்ட்போர்ட் பள்ளி சிறப்பிடம்

தேசிய டென்னிஸ் போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளுடன் மாண்ட்போர்ட் பள்ளி முதல்வர் அருட்சகோதரர் ஆரோக்கிய சகாயராஜ், பயிற்சியாளர் எஸ். வசந்தகுமார்.

ஏற்காடு, அக்.9: ஐசிஎஸ்இ பள்ளிகளுக்கு இடையே தேசிய அளவிலான டென்னிஸ் போட்டியில் ஏற்காடு மாண்ட்போர்ட் பள்ளி மாணவர்கள் சிறப்பிடம் பெற்றனர்.

கர்நாடக மாநிலம், டி.கியூப் விளையாட்டு கழகத்தில் அண்மையில் போட்டிகள் நடைபெற்றன. இதில் ஏற்காடு மாண்ட்போர்ட் பள்ளி சார்பில் மாணவிகள் இறுதிச் சுற்றுக்குத் தேர்வாகினர். மாணவி ஆர். தனிஷா, கே.எஸ். மேகா இரட்டையர் பிரிவு இரண்டாம் இடம் பிடித்து வெள்ளிப் பதக்கங்களை பெற்றனர்.

வெற்றிபெற்ற மாணவிகளை மாண்ட்போர்ட் பள்ளி முதல்வர் அருட்சகோதரர் ஆரோக்கிய சகாயராஜ், பயிற்சியாளர் எஸ். வசந்தகுமார், ஆசிரியர்கள் பாராட்டினர்.

பாங்க் ஆஃப் பரோடா / बैंक ऑफ़ बड़ौदा / Bank of Baroda / India's International Bank / 119 FOUNDATION YEAR LEADING WITH TRUST

பேங்க் ஆப் பரோடா
கிளை : கோல்நாய்க்கன்பட்டி கிளை, எண்.1/87, ரெட்டியூர், கோல்நாய்க்கன்பட்டி, MTPS அஞ்சல்,
மேட்டூர் அணை, சேலம் – 636 402. போன் : 96292 92389. இமெயில் : vjkosa@bankofbaroda.bank.in

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின், விற்பனை அறிவிப்பு
பிற்சேர்க்கை –IV-A (காண்க, நிபந்தனைகளின் விதி 6(2) & 8(6))

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 6(2) & 8(6)–ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின் மின்–ஏல விற்பனை அறிவிப்பு.

கீழே விவரிக்கப்பட்டுள்ள பாங்க் ஆப் பரோடா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை வங்கி அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்கள், அடமானதாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் அடமானத்திற்குள்ளான/ஈடு வைக்கப்பட்ட, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனப் படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள சொத்து, நிலுவையை வசூலிக்க வேண்டி "எங்கு உள்ளனவோ அந்நிலையில்", "என்ன உள்ளனவோ அப்படியே", "எப்படியுள்ளதோ அப்படியே" மற்றும் "பொறுப்பேற்காத நிலையில்" எனும் முறையில், மின் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்து(க்கள்) / நிலுவைகள் / நிர்ணயிக்கப்பட்ட விலை / முன்வைப்புத் தொகை / மின் ஏலத் தேதி மற்றும் நேரம் / ஏல அதிகரிப்பு தொகை போன்ற விபரங்கள் கிழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / உத்தரவாதம்அளித்தவர்கள் / அடமானதாரர்கள் பெயர் மற்றும் விலாசம்	அசையாச் சொத்தின் விரிவான விபரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன் (உரிமையாளர் / அடமானதாரர் பெயர்)	மொத்த நிலுவைத் தொகை	மின் ஏலத் தேதி / நேரம்	1. குறைந்தபட்ச விலை, 2. முன் வைப்புத் தொகை 3. ஏல உயர்வுத் தொகை	சுவாதீன நிலை (ஆக்கபூர்வ/ கொள்நிலை)	சொத்தினைப் பார்வையிடும் தேதி / நேரம்
1.திரு. மகேந்திரன், த/பெ. ராஜேந்திரன் **(கடன்தாரர்),** **2.திருமதி. ரஞ்சிதம்,** க/பெ ராஜேந்திரன், **(சார் கடன்தாரர்),** கதவு எண்.1/55, தார்க்காடு, தார்க்காடு (அஞ்சல்), கருங்கல்லூர், காவேரிபுரம், மேட்டூர் – 636303 **திரு. பழனிசாமி,** த/பெ செங்கோட கவுண்டர், **(உத்தரவாதமளித்தவர்),** எண்.1/186, உக்கம்பருத்திக்காடு, கொளத்தூர், மூலக்காடு, மேட்டூர், சேலம் – 636303	திருமதி. ரஞ்சிதம், க/பெ.ராஜேந்திரன் பெயரிலான அடமானத்திற்குள்ளான சொத்து விபரம். சேலம் மேற்கு பதிவுமாவட்டம், கொளத்தூர் சார் பதிவு அலுவலகம், கருங்கல்லூர் கிராமம், பட்டா எண்.172, புதிய சர்வே எண்.1226/7 (பழைய சர்வே எண்.1051/P)ல் உள்ள 3669 சதுரடி நிலம் மற்றும் கதவு எண்.11/42 கொண்ட கட்டிடச் சொத்து. 17.04.2003 தேதிய தான செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி எல்லைகள் விபரம் : வெங்கடாசலக் கவுண்டர் வீட்டுக்குக் கிழக்கு, திருநாவுக்கரசு வீட்டுக்கு மேற்கு, சின்னசாமி நிலத்துக்கு வடக்கு, சம்பத் வீட்டுக்குத் தெற்கு. தற்போது 12.10.2018 தேதிய கிராம நிர்வாக அலுவலர் சான்றிதழின்படி : வெங்கடாசலம் குமாரர், V.வரதராஜனின் சர்வே எண்.1226/2ல் உள்ள நிலத்துக்குக் கிழக்கு, சர்வே எண்.1226/8ல் உள்ள புறம்போக்குக் கிணறுக்கு மேற்கு, சர்வே எண்.1226/6Aல் உள்ள சின்னசாமி கவுண்டர் நிலத்துக்கு வடக்கு, சர்வே எண்.1226/1ல் உள்ள புறம்போக்கு வீதிக்குத் தெற்கு.	(வீட்டுக்கடன் கணக்கு எண். 70000600001046) ரூ.41,39,206/– (ரூபாய் நாற்பத்து ஒரு லட்சத்து முப்பத்து ஒன்பதாயிரத்து இருநூற்று ஆறு மட்டும்) 04.10.2026 தேதி வரை மேலும் 05.10.2026 தேதியிலிருந்து சேர்க்கப்பட வேண்டிய வட்டி + NPA தேதியிலிருந்து சட்டப்படியான மற்றும் பிற செலவுகளுடன்	28.10.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	1. ரூ.41,00,000/– (ரூபாய் நாற்பத்து ஒரு லட்சம் மட்டும்) 2. ரூ.4,10,000/– (ரூபாய் நான்கு லட்சத்து பத்தாயிரம் மட்டும்) 3. ரூ.25,000/– (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்)	கொள்நிலை (Physical) சுவாதீனம்	27-10-2026 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு https://www.bankofbaroda.in/e-auction.htm மற்றும் ஆன்லைன் ஏலத்தின் போர்டல் https://baanknet.com. இணையதளங்களின் லிங்க்-ல் பார்வையிடலாம். மேலும் ஏலதாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை – போன் : 96292 92389 / 9176060206 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 09.10.2026 / இடம் : சேலம்
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பேங்க் ஆஃப் பரோடா